بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 17/06/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 22 அன்னார் தரப்பிலிருந்து அனுப்பப்பட்ட போர்ப்படைகள் பற்றிய குறிப்பு மற்றும் அந்தப் போர்களில் சஹாபா பெருமக்கள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) உடைய மகத்துவமிக்க தியாகங்கள் பற்றிய உள்ளத்தை உருக்கக்கூடிய ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் காலத்தில் 11 போர்ப்படைகள் அனுப்பப்பட்டன. முதலாவது போர்ப்படை பற்றியோ எடுத்துக் கூறப்பட்டது. அது மிகவும் நீளமாக இருந்தது. **மீதமிருந்த 10 போர்ப்படைகளில் 2 மற்றும் 3 பற்றி வருகிறது:** ஹஸ்ரத் ஹுஸைஃபா மற்றும் ஹஸ்ரத் அர்ஃபஜா மூலமாக இந்தப் போர்ப்படை அனுப்பப்பட்டது. இது ஓமனில் முர்தத் ஆகியிருந்த கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக அனுப்பப்பட்டிருந்தது. 'ஓமன்' பஹ்ரைனுக்கு அருகில் உள்ள ஏமனின் ஒரு நகரமாகும். அங்கு சிலை வணக்கம் செய்யக்கூடியவர்களும் நெருப்பை வணங்குபவர்களும் வசித்து வந்தனர்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய காலக்கட்டத்தில், ஓமன் ஈரானியர்களின் அதிகாரத்துக்கு உட்பட்டிருந்தது. அவர்கள் சார்பாக ஜேஃபர் என்பவர் அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வஃபாத் ஆன பிறகு, அரபு நாட்டின் நாலப்புறமும் மார்க்கத்தை விட்டு விலகுதலும் கிளர்ச்சி செய்தலும் பரவி விட்ட போது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்களை ஓமனிலிருந்து மதீனாவுக்கு வரவழைத்துக் கொண்டார்கள். மறுபுறம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு, அந்த மக்களில் லகீத் பின் மாலிக் அஸ்தீ என்பவன் எழுந்தான். அவனது பண்புப் பெயர் ஸுல் தாஜ் ஆகும். அவன் நபித்துவ வாதம் புரிந்து விட்டான். ஓமனிலிருந்த அறிவீனர்கள் அவனைப் பின்பற்றினர். இவன் ஓமன் மீது ஆதிக்கம் செலுத்தி விட்டான். இதனால், ஜேஃபருக்கும் அவருடைய சகோதரர் அப்பாதுக்கும் மலைகளில் தஞ்சம் புக வேண்டி வந்தது.

ஜேஃபர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இந்த முழு சூழ்நிலையைப் பற்றியும் தெரியப்படுத்தி உதவி கோரினார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவர்களிடம் 2 அமீர்களை அனுப்பினார்கள். ஒன்று, ஹுஸைஃபா பின் முஹ்ஸின் ஃகல்ஃபானீ ஹமீரீயை ஓமனுக்கும், இரண்டாவது, அர்ஃபஜா பின் ஹர்ஸமாவை மஹ்ராவுக்கும் அனுப்பினார்கள். அவர்கள் இருவரும் ஒன்றாகப் பயணிக்குமாறும் போரை ஓமனிலிருந்து துவங்குமாறும் கட்டளையிட்டார்கள். 'மஹ்ரா' ஏமனின் ஒரு

கோத்திரத்தின் பெயராகும். ஓமனில் போர் நடக்கும் போது, ஹுஸைஃபா வழிநடத்துபவராக இருப்பார்கள் என்றும் மஹ்ராவில் போர் நடக்கும் போது, ஹுஸைஃபா படைத்தளபதி பொறுப்பை நிறைவேற்றுவார்கள் என்றும் ஆணையிட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவர்கள் இருவருக்கும் உதவுவதற்காக ஹஸ்ரத் இக்ரிமா பின் அபீ ஜஹ்லை அனுப்பினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கட்டளைப்படி, இக்ரிமா அவர்கள் தம்முடைய படையை அழைத்துக் கொண்டு, அர்ஃபஜா மற்றும் ஹுஸைஃபாவுக்குப் பின்னாலேயே ஓமனை நோக்கிப் பயணமானார்கள். அவர்கள் இருவரும் ஓமனைச் சென்றடையும் முன்னரே இக்ரிமா ஓமனுக்கு அருகில் உள்ள 'ரிஜாம்' எனும் ஓரிடத்தில் அவர்கள் இருவரையும் சென்றடைந்தார்கள். அவர்கள் ஜேஃபர் மற்றும் அவரது சகோதரர் அப்பாதிடம் தமது தூதுச் செய்தியை அனுப்பி விட்டார்கள். முஸ்லிம் படையின் தலைவர்களின் தூதுச் செய்தி கிடைத்ததும், ஜேஃபரும் அப்பாதும், தாம் முதலில் ஒளிந்திருந்த தத்தமது தங்குமிடங்களிலிருந்து வெளியேறி, ஸுஹாருக்கு வந்து கூடாரமிட்டார்கள். ஹுஸைஃபா, அர்ஃபஜா மற்றும் இக்ரிமா ஆகியோருக்குத் தாங்கள் அனைவரும் எங்களிடம் வந்து விடுங்கள் என்று தூது அனுப்பினார்கள்.

முஸ்லிம்களின் படை ஸுஹாரில் ஒன்றுகூடி விட்டது. அத்துடன் இணைந்திருந்த பகுதிகளை, முர்தத்கள் இல்லாத பகுதிகளாக ஆக்கி விட்டது. மறுபுறம் லகீத் பின் மாலிக்குக்கு இஸ்லாமிய படை வந்தடைந்த தகவல் கிடைத்தது. அவன் தனது படையை அழைத்துக் கொண்டு போரிடுவதற்காகப் புறப்பட்டான். அவன் துபா எனும் இடத்தில் தங்கினான். துபாவில் லகீத் உடைய படையோடு மும்முரமான போர் நடைபெற்றது. ஆரம்பத்தில் லகீத் உடைய கை ஓங்கியிருந்தது. முஸ்லிம்கள் தோல்வி அடைந்துவிடும் நிலை இருந்தது. ஆனால், லகீத் உடைய படை ஆட்டங்கண்டு போனது. அவர்கள் ஓடி விட்டனர். முஸ்லிம்கள் அவர்களை விரட்டிச் சென்றார்கள். பத்தாயிரம் போர்வீரர்களை வாளுக்கு இரையாக்கினார்கள். பிள்ளைகளையும் பெண்களையும் சிறைபிடித்து விட்டார்கள். செல்வங்களையும் சந்தையையும் ஆதிக்கத்தில் எடுத்துக் கொண்டார்கள். அதில் ஐந்தில் ஒரு பங்கை அர்ஃபஜாவின் கையில் கொடுத்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் அனுப்பி வைத்து விட்டார்கள். இவ்வாறு, ஓமனிலும் இந்தக் குழப்பம் முடிவுக்கு வந்து, முஸ்லிம்களின் ஆளுமை உறுதியாக நிலைபெற்று விட்டது.

போருக்குப் பிறகு, ஹுஸைஃபா அவர்கள் ஓமனிலேயே தங்கி விட்டார்கள். அங்குள்ள நிலைமைகளை சீரமைப்பதிலும், அமைதி, சமாதானத்தை ஏற்படுத்துவதிலும் ஈடுபட்டு விட்டார்கள். அர்ஃபஜா போர்ச் செல்வங்களை எடுத்துக் கொண்டு மதீனா சென்று விட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இக்ரிமா அவர்களுக்கு, 'நீங்கள் ஹுஸைஃபா மற்றும் அர்ஃபஜாவுக்கு உதவி செய்து முடித்த பின்னர் மஹ்ரா சென்று விடுங்கள். பிறகு, அங்கிருந்து ஏமன் சென்று விடுங்கள். எதுவரை என்றால், ஏமன் மற்றும் ஹிஸ்ர் மௌத் உடைய போர் நடவடிக்கைகளில் முஹாஜிர் பின் உமய்யாவுக்குத் துணை நில்லுங்கள். ஓமனுக்கும் ஏமனுக்கும் நடுவில் எவர்கள் எல்லாம் முர்தத் ஆகி விட்டார்களோ அவர்களை தண்டியுங்கள். போரில் உங்களின் சிறந்த பணிகளைப் பற்றிய தகவல் எனக்குக் கிடைத்துக் கொண்டே இருக்கட்டும்' என்று ஏற்கனவே ஆணையிட்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் இக்ரிமா அவர்கள் முஸ்லிம்களின் பெரும் படையோடு மற்ற இணைவைப்பாளர்களை தண்டிப்பதற்காக முன்னோக்கிச் சென்று விட்டார்கள். அவர்கள் மஹ்ராவிலிருந்து தமது போர் நடவடிக்கைகளை ஆரம்பித்தார்கள். ஹஸ்ரத் இக்ரிமா அவர்கள் மஹ்ரா கோத்திரம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் தாக்குதல்

தொடுத்து விட்டார்கள். அவர்களை எதிர்கொள்வதற்காக மஹ்ரா மக்கள் இரண்டு குழுக்களாகப் பிரிந்து விட்டனர். ஒரு குழு, ஜேரூத் எனும் இடத்தில் ஷக்ரீத் என்பவனின் தலைமையில் அகழியில் பதுங்கி இருந்தது. இரண்டாவது குழு, பனூ முஹாரிபுடைய ஒரு மனிதன் முஸப்பாவுடைய தலைமையில் இருந்தது. இந்த இரு தலைவர்களும் ஒருவர் மற்றவருக்கு எதிராக இருந்தனர். இக்ரிமா அவர்கள் ஷக்ரித்துடன் குறைவான எண்ணிக்கையில் மக்கள் இருப்பதைப் பார்த்த போது, இஸ்லாத்திற்குத் திரும்பி வருமாறு அவனுக்கு அழைப்பு விடுத்தார்கள்.

இவன் முதலில் முஸ்லிமாக இருந்தான். மீண்டும் முஸ்லிம் ஆகிவிடு. முஸ்லிம்களோடு போர் புரியாதே என்று இக்ரிமா அவர்கள் அழைப்பு விடுத்தார்கள். அந்த ஆரம்பகட்ட எடுத்துரைப்பிலேயே ஷக்ரீத், அவர்களின் அழைப்பை ஏற்றுக் கொண்டான். பிறகு, இக்ரிமா அவர்கள் முஸப்பாவுக்கு இஸ்லாத்தின் பால் அழைப்பு விடுத்தார்கள். ஆனால், அவன் நிராகரித்து விட்டான். எவ்வாறு இருப்பினும், இக்ரிமா அவர்கள் அவனை நோக்கி முதலில் அடியெடுத்து வைத்தார்கள். ஷக்ரீத்தும் அவர்களுடன் இருந்தார். இவர்கள் இருவருக்கும் நஜ்த் பகுதியில் முஸப்பாவோடு போர் நடைபெற்றது. அல்லாஹ் முர்தத்தாகியிருந்த கிளர்ச்சியாளர்களின் படைக்குத் தோல்வியை வழங்கினான். அவர்களின் தலைவன் கொல்லப்பட்டான். முஸ்லிம்கள் ஓடியவர்களை விரட்டிச் சென்றார்கள். அவர்களில் பலரைக் கொன்று விட்டார்கள். பலர் சிறைபிடிக்கப்பட்டனர். போர்ச் செல்வங்களில், ஈராயிரம் உயர்தர பெண் ஒட்டகங்களும் முஸ்லிம்களின் கைக்குக் வந்தன.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் இக்ரிமா அவர்களுக்கு, ‘மஹ்ராவுக்குப் பிறகு ஏமன் சென்று விடுங்கள். ஏமன் மற்றும் ஹிஸ்ர் மௌத் உடைய போர் நடவடிக்கைகளில் ஹஸ்ரத் முஹாஜிர் பின் உமய்யாவுக்குத் துணை நில்லுங்கள். ஓமனுக்கும் ஏமனுக்கும் நடுவில் எவர்கள் எல்லாம் முர்தத் ஆகி விட்டார்களோ அவர்களை தண்டியுங்கள்’ என்று வழிகாட்டல் வழங்கி இருந்தார்கள். ஆக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இந்த வழிகாட்டலை செயல்படுத்திய வண்ணம் ஹஸ்ரத் இக்ரிமா அவர்கள் மஹ்ராவிலிருந்து புறப்பட்டு ஏமனை நோக்கிச் சென்று விட்டார்கள். ஹஸ்ரத் இக்ரிமா அவர்கள் முழுமையாக தெற்கு ஏமனிலேயே தங்கினார்கள். அங்கு நகா மற்றும் ஹமீர் கோத்திரங்களை தண்டிப்பதில் ஈடுபட்டிருந்தார்கள். வடக்கு ஏமனை நோக்கி செல்ல வேண்டிய நிர்பந்தமே வரவில்லை.

‘குந்தா’ கோத்திரமும் ஏமனுக்கு அருகிலேயே வசித்து வந்தது. அது ஹிஸ்ர் மௌத் உடைய பகுதியில் இருந்தது. அந்தப் பகுதியின் அதிகாரியாக ஹஸ்ரத் ஸியாத் பின் லபீத் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் ஸகாத் தொடர்பாக கண்டிப்பு காட்டிய போது, அவர்களுக்கு எதிராக கிளர்ச்சி உருவாகி விட்டது. எனவே, ஹஸ்ரத் இக்ரிமா மற்றும் ஹஸ்ரத் முஹாஜிர் பின் உமய்யா ஆகிய இருவரும் அவர்களுக்கு உதவுவதற்கு சென்றடைந்தார்கள். எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் இக்ரிமா அவர்கள் முர்தத்களுடன் போர்கள் புரிந்து முடித்து விடுபட்ட பிறகு, மதீனாவுக்குத் திரும்பி விட்டார்கள். அவர்கள் மதீனா வந்தடைந்ததும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவர்களுக்கு காலித் பின் ஸையீதுக்கு உதவி செய்வதற்காக புறப்படுமாறு கட்டளையிட்டார்கள். அங்கு ஹஸ்ரத் இக்ரிமா அவர்கள் வெளிப்படையாகத் தெரிகின்ற சிறப்புப் பணிகளை செய்தார்கள். மிகவும் வீரத்தோடு சண்டையிட்டவாறு ஷஹாதத் பானத்தை அருந்தினார்கள். இதன் விளக்கம் சிரியாவின் போர்களில் எடுத்துரைக்கப்பட்டு விடும். இன் ஷா அல்லாஹ்!

**ஐந்தாவது போர்ப்படை, முர்தத் ஆகியிருந்த கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான ஹஸ்ரத் ஷுரஹ்பீல் பின் ஹஸனா அவர்களின் படைக்குழுவாக இருந்தது.** ஹஸ்ரத்

ஷரஹ்பீல் அவர்கள் ஆரம்பத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களில் ஒருவராக இருந்தார்கள். இவர்கள் தமது சகோதரர்களுடன் அபீஸீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்தார்கள். அபீஸீனியாவிலிருந்து திரும்பி வந்த பிறகு, மதீனாவில் பனூ ஸரீக் உடைய வீடுகளில் தங்கினார்கள். இவர்கள் கிலாஃபத்தே ராஷிதாவில், புகழ்பெற்ற படைத்தளபதிகளில் ஒருவராகத் திகழ்ந்தார்கள். ஹிஜ்ரீ 18 ஆம் ஆண்டில் 67 வயதில் அம்வாஸ் பிளேக் நோயில் வஃபாத் ஆனார்கள்.

**ஆறாவது போர்ப்படை, முர்தத் ஆகியிருந்த கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்களின் படைக்குழுவாக இருந்தது.** ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு கொடியை ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்களுக்கு வழங்கி இருந்தார்கள். குஸாஆவும் கூட அரேபியாவின் ஒரு பிரசித்திப் பெற்ற கோத்திரமாகும். அது மதீனாவிலிருந்து 10 வழியிடைப்படிகள் தூரத்தில் வாதியுல் குறாவைத் தாண்டி 'மதாயினுஸ் சாலிஹ்' உடைய மேற்கில் வசிக்கிறது. ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்களின் சுருக்கமான அறிமுகம் பின்வருமாறு: இவர்களின் தந்தையார் பெயர் ஆஸ் பின் வாயில் ஆகும். இவர்களின் தாயார் பெயர் நாபிகா பின்த் ஹர்மலா ஆகும். ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்கள் ஹிஜ்ரீ 8 ஆம் ஆண்டு மக்கா வெற்றிக்கு ஆறு மாதங்களுக்கு முன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். இவர்களின் சிறந்த பணிகளில் தெளிவாகத் தெரியும் ஒரு சிறப்புப் பணி எகிப்தின் வெற்றியும் ஆகும்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தயார் செய்ய வைத்த 11 கொடிகளில் ஒரு கொடி ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்களுக்காகவும் இருந்தது. அவர்களிடம் அன்னார், குஸாஆவின் முர்தத்களோடு போரிடும் பொறுப்பை ஒப்படைத்திருந்தார்கள். ஏனெனில், அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்நாளிலும் ஸாத்துஸ் ஸலாஸில் போரில், குஸாஆ கோத்திரத்துடன் போர் புரிந்து விட்டிருந்தார்கள். அந்தக் கோத்திரத்தின் எல்லா நிலைமைகள் பற்றியும் அனைத்து வழிகள் பற்றியும் நன்றாக அறிந்து வைத்திருந்தார்கள். குஸாஆ கோத்திரத்தினர் மகிழ்ச்சியுடன் இஸ்லாத்தில் நுழைந்திருக்கவில்லை. அவர்களின் உள்ளம் இஸ்லாத்தின் மீதான அன்பை விட்டும் காலியாக இருந்தது. எனவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு, அவர்கள் ஸகாத் கொடுக்க மறுத்து விட்டனர்.

கிலாஃபத் அவையிலிருந்து கட்டளை கிடைத்ததுமே ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்கள் தமது படையுடன் குஸாஆ சென்றடைந்து விட்டார்கள். அங்கு சென்று, பனூ குஸாஆ போர் புரிவதற்கு முழு ஆயத்தத்தோடு இருக்கிறார்கள் என்பதைப் பார்த்தார்கள். போர் ஆரம்பமானது. பயங்கரமான போர் நடைபெற்றது. முன்னரைப் போன்று இப்போதும் குஸாஆவுக்குத் தோல்வியைத் தழுவ நேரிட்டது. ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்கள் அந்த மக்களிடமிருந்து ஸகாத் வாங்கிக் கொண்டு, மீண்டும் அவர்களை இஸ்லாத்தின் அரவணைப்பில் கொண்டு வந்து, உதவப்பட்டவராகவும் வெற்றி பெற்றவராகவும் மதீனாவுக்குத் திரும்பி வந்து விட்டார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* மற்ற போர்ப்படைகளைப் பற்றிய குறிப்பு இனி வரும் காலங்களில் எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ

وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ

ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)